


- வாழ்வோம்

அண்மையில், டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற்ற `சின்மயா அம்ரித் மகோத்சவ்' என்கிற ஆன்மிக நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்த பிரதமர் மோடி, சின்மயா மிஷன் நிறுவனரான மறைந்த சின்மயானந்தாவின் முப்பரிமாண ஹாலோகிராம் உருவத்துடன் மேடையில் உரையாடினார். ஏ.ஐ. மூலம் வடிவமைக்கப்பட்டிருந்த அந்த முப்பரிமாண பிம்பம், "இந்தியா உன்னுடன் இருக்கிறது, நரேந்திரா" என்று சொல்லியதாம். அதன் வீடியோ காட்சியை வெட்டி, இணையத்தில் உலாவ விட்டிருக்கிறது `சங் பரிவார்' கூட்டம்.

இந்திய அறிவியலின் திசைவழி இதுதானா?

`மறைந்த ஒரு சாமியாரின் உருவத்தைத் தொழில்நுட்பத்தின் உதவியோடு உருவாக்கி, அவரிடமிருந்து ஆட்சியாளர்களுக்கான நற்சான்றிதழைப் பெறும் இத்தகைய நாடகம், இந்திய அறிவியலின் திசைவழி குறித்துப் பல கேள்விகளையும் கவலைகளையும் எழுப்புகிறது' எனக் கண்டித்துள்ளது, 'தி ஹார்டுலைன்' இணைய ஊடகம்.

'இந்திய அரசியலில், இந்த 'ஆன்மிக பிம்பம்' என்பது வெறும் தோற்றமோ விளம்பரமோ மட்டுமல்ல; அது தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய அரசியல் ஆயுதமாக மாறியிருக்கிறது. தொழில்நுட்பம் என்பது மனித சமூகத்தின் அறியாமை, வறுமை மற்றும் பிற்போக்குத்தனங்களை வேரறுத்து எறியும் வாளாகப் பயன்பட வேண்டுமே தவிர, பழைய மத நம்பிக்கைகளுக்கும் அரசியல் பிம்ப அமைப்புகளுக்கும் நவீன பூச்சுப் பூசும் கருவிகளாக மாறக் கூடாது.

மேலைநாடுகளும் கிழக்காசிய நாடுகளும் ஏ.ஐ. மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் அடுத்தகட்ட தொழிற்புரட்சியை நோக்கி மிக வேகமாக முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் வேளையில், இந்தியாவில் இன்னும் இதுபோன்ற ஆன்மிகக் கூத்துகள் அரசு மேடைகளிலேயே அரங்கேற்றப்படுவது, நாட்டின் உண்மையான வளர்ச்சி, பகுத்தறிவுப் பாதையை முடக்கும் செயலாகும்' என கண்டித்துள்ளது, 'தி ஹார்டுலைன்' ஊடகம்.

ஃப்ளாஷ்பேக்



நெடுநாள் விருப்பம் நிறைவேறியது!

2010-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் நம் தானைத் தலைவரை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்த பொன்னான தருணம். அப்போது, ஒதியத்தூர் கிளைக் கழகச் செயலாளராக இருந்தேன். தலைவர் அவர்கள், 'எங்கே இருந்து வருகிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'சேலம் மாவட்டத்திலிருந்து வருகிறேன்' என்று சொன்னேன். தலைவர் அவர்கள் என்னைப் பார்த்து புன்னகையுடன், 'பார்த்து வீட்டுக்குச் செல்லுங்கள்' என்று கூறினார். நெடுநாள் விருப்பம் நிறைவேறிய மகிழ்ச்சியும், தலைவரைக் கண்டு ஊக்கம் பெற்றதும் என்னை என்றும் இயக்கும்.



பாண்டியராஜன்

– பாண்டியராஜன்,
கிளைக் கழக முன்னாள் செயலாளர்,
ஒதியத்தூர், சேலம் மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

திராவிட இயக்கம், முன்னோக்கிச் சிந்தித்தது!



செங்கல்பட்டில், 1929-ஆம் ஆண்டு நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில், குடும்பச் சொத்தில் பெண்களுக்குப் பங்கு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார் பெரியார். அந்த எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், 1989-இல் பரம்பரை குடும்பச் சொத்தில் மகன்களுக்கு இருக்கும் உரிமை போலவே, மகள்களுக்கும் உண்டு என்பதை சட்டத்தின் வாயிலாக நிலைநிறுத்தி, பெண்களுக்குச் சம உரிமை வழங்கினார், முத்தமிழறிஞர் கலைஞர். பெரியாரின் பெருங்கனவை 60 ஆண்டுகள் கழித்துத்தான் நம்மால் நிறைவேற்ற முடிந்தது என அப்போது கூறினார் கலைஞர். ஆனால், அகில இந்திய அளவில் இத்தகைய சட்டம், அதன்பிறகு 16 ஆண்டுகள் கழித்து 2005-ஆம் ஆண்டில்தான் கொண்டு வரப்பட்டது.

*இந்தச் சட்டம் வந்த பிறகும், '2005-ஆம் ஆண்டுக்கு முன்பு தந்தை இறந்திருந்தால் பெண்களுக்கு சொத்தில் பங்கு உண்டா?' என்ற குழப்பம் நீடித்தது. '2005 செப்டம்பர் 9-ஆம் தேதிக்கு முன்பாகத் தந்தை உயிருடன் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மகள்கள் தங்களின் பூர்வீகச் சொத்தில் பங்கு கோர முழு உரிமை உண்டு' என்று 2020-இல் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. சுயமரியாதை இயக்கம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சிந்தித்ததை, அகில இந்தியா முழுவதும் செயல்படுத்த, ஒரு நூற்றாண்டு தேவைப்பட்டிருக்கிறது. சுயமரியாதை இயக்கம் வலியுறுத்திய இந்தச் சொத்துரிமை என்பது பாகுபாடு இல்லாமல் அனைத்து பெண்களுக்குமானது. அதை உணர்த்தும் வகையிலும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் தவிர்க்கவே முடியாமல் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பதை உணர்த்தும் வகையிலும், பேரறிஞர் அண்ணா எழுதிய மிகச் சிறந்த நாடகம், **'பாப்புலர் ஸ்டோர்'**.*

1945-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்த நாடகம், பெண்களுக்கான சொத்துரிமை குறித்து, அக்காலகட்ட விவாதத்தை நுணுக்கமாகப் பேசுகிறது. இந்து பெண்களின் சொத்துரிமைச் சட்டத்தில் நிலவிய குழப்பங்களைத் தீர்க்கும்விதமாக, பிரிட்டிஷ் அரசு 1937-ஆம் ஆண்டு, பி.என்.ராவ் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அதனடிப்படையில் இக்குழுவினர், 1944-ஆம் ஆண்டு இந்து சட்டத் தொகுப்பின் ஆரம்பகட்ட வரைவை உருவாக்கினர். 1945-ஆம் ஆண்டு, 12 பிராந்திய மொழிகளில் இந்த வரைவறிக்கை மொழிபெயர்க்கப்பட்டது. மும்பை, புனே, டெல்லி, அலகாபாத், பாட்னா, கொல்கத்தா, சென்னை, லாகூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு பி.என்.ராவ் குழுவினர் சுற்றுப்பயணம் செய்து, இவ்வறிக்கையைத் தயார்செய்தனர்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவது, பலதார மணமுறையை ஒழிப்பது, விவாகரத்து மற்றும் பராமரிப்பு உரிமைகளைச் சட்டபூர்வமாக்குவது என முக்கிய சிக்கல்களுக்குத் தீர்வை முன்வைத்தது இந்தக் குழு. 'வர்ணாசிரமம்' - 'மனுஸ்மிருதி' போன்றவற்றைக் காரணம் காட்டி பெண்ணுரிமைகளை மறுத்துவந்த வைதீகர்களுக்கு இந்த வரைவு, வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டியது. அதை மிகத் தெளிவாகத் தனது நாடகத்தில் விளக்கினார் அண்ணா.

06 பேரறிஞர் பேனா

பரமசிவம் அய்யர், சுந்தரம் செட்டியார், வக்கீல் வரதராஜ், வரதராஜின் மனைவி வத்சலா, பார்வதி, பார்வதியின் கணவர் சுப்பிரமணிய குருக்கள், நந்தலால் சேட்டு, சேட்டுவின் மனைவி யமுனா பாய், பரமசிவம் அய்யரின் குமாஸ்தா சிதம்பரம் பிள்ளை என நாடகத்தில் வரும் ஒன்பது பாத்திரங்களும் தனித்தனியாக மனத்தில் நிற்கும் வகையில் காட்சிகளை அமைத்திருப்பார் அண்ணா.

இதில் பார்வதி என்பவர், அந்த ஊரில் 'இந்து சட்டத்திருத்தம் கூடாது' என்று பேசும் ஆத்திக மகளிர் சங்கத்தின் தலைவியாக இருப்பார்.

வத்சலாவைக் காண, அவருடைய வீட்டுக்குச் செல்கிறார் பார்வதி. அங்கு நடக்கும் உரையாடலில்...

***பார்வதி:** நேத்திக்கி மீட்டிங் ரொம்ப சிலாக்கியமா இருந்தது. நீ பார்க்கலே!*

***வத்சலா:** சொல்லிண்டா... யாரோ யமுனா பாய்னு ஒருத்தி தலைமை வகிச்சாளாம்.*

`வர்ணாசிரமம்' - `மனுஸ்மிருதி' போன்றவற்றைக் காரணம் காட்டி பெண்ணுரிமைகளை மறுத்துவந்த வைதீகர்களுக்கு இந்த வரைவு, வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டியது. அதை மிகத் தெளிவாகத் தனது நாடகத்தில் விளக்கினார் அண்ணா.

***பார்வதி:** நகை வியாபாரம் செய்றாளே நந்தலால் சேட், அவரோட பார்யா (மனைவி).*

***வத்சலா:** மார்வாடின்னு சொல்லும்.*

***பார்வதி:** ஆமாம். அதனாலே என்ன?*

***வத்சலா:** மார்வாடி, தொம்பச்சி எவளா இருந்தாலும் அவாளை அழைச்சிண்டு வந்து தொட்டுக்கறதும், பேசறதும் நேக்குப் பிடிக்காது. நீங்கள்லாம் சூனாமானா (சுயமரியாதை இயக்கக் கொள்கைக்காரர்கள்) ஆயிட்டேள், ஜாதி பார்க்க மாட்டேள்.*

***பார்வதி:** மார்வாடி ஜாதின்னா மட்ட முன்னு பேரோ... அதெல்லாம் ஒண்ணும் இல்லே. அவ நம்ம கட்சியில இருந்தா நம்ம தீர்மானத்துக்கு மதிப்பு தருவா சர்க்காரிலே. அதற்காகத்தான் அவாள சேர்ந்துண்டோம். அதனால அவா ஜாதி நம்மளவிட ஒசந்துடுமோ?*

***வத்சலா:** நேக்குப் பிடிக்கலே*

***பார்வதி:** ஏன், நம்ம மதம் நாச மானாக்கூட சரின்னு சொல்றியோ?*

***வத்சலா:** ஆமா, இப்போ வரப்போற சட்டத்திருத்தம் நம்ம போல பொம்மனாட்டிகளுக்கு சொத்துச் சுதந்திரம் வாங்கித் தருதாமே, அதை நாம எதிர்க்கிறதோ? யானை தன் தலையிலயே மண்ண அள்ளி போட்டுண்ட மாதிரி?*

***பார்வதி:** வத்சு, என்னடி சூனாமானா வாட்டம் பேசறே?*

***வத்சலா:** பொம்பளைகளுக்கும் ஆம்பளைகளுக்கு இருப்பது போல சொத்து இருக்கணும்னு சொன்னா, அது சூனாமானாவா?*

என வத்சலா ஆவேசமாகக் கேட்க, பார்வதி அங்கிருந்து புறப்பட்டுவிடுவார். இந்த சட்டத்திருத்தத்தினால் பார்ப்பனர் வீட்டுப் பெண்களுக்கும் நன்மைதான் நடக்கப்போகிறது என்று விளக்கியிருப்பார் அண்ணா. அப்போது எதிர்த்த பெண்கள் கூட, இன்றைக்கு இந்தச் சட்டத்தை எதிர்க்க மாட்டார்கள். பரம்பரைச் சொத்தில் பங்கு கிடையாது என்றால்தான் இப்போது அவர்களும் எதிர்ப்பார்கள். அந்த அளவுக்குச் சமூக மாற்றத்தைத் தொலைநோக்குச் சிந்தனையோடு கணித்து, அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுத்தது, திராவிட இயக்கம்.

அதே போல சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் எந்த அளவுக்கு வீரியமாக இருந்தது என்பதையும் இந்த நாடகத்தின் ஒவ்வொரு கதாபாத்திரத்தின் உரையாடலிலும் மிக அழுத்தமாகப் பதிவு செய்திருப்பார் அண்ணா. ஆணாதிக்கமும் சாதிய மேலாதிக்கமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்ததே, இரண்டும் வேறு வேறல்ல என்பதையும் மிக நுணுக்கமாக இந்த நாடகத்தின் உரையாடல்களில் உணர்த்தியிருப்பார் அண்ணா.

...தொடரும்

ர.பிரகாசு

தெரிந்து கொள்வோம்

10.8.1942
`முரசொலி'யை முதன்முதலில் துண்டறிக்கையாக வெளியிட்டார் கலைஞர்.

06.03.1967
காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தி, தமிழ்நாட்டில் தி.மு.க., ஆட்சி அமைத்தது.

22.09.1969
மத்திய–மாநில உறவுகளை ஆராய, `ராஜமன்னார் குழு' அமைத்தார் கலைஞர்.

20.04.1974
தமிழ்நாடு சட்டமன்றத்தில், `மாநில சுயாட்சித் தீர்மானம்' நிறைவேற்றம்.

22.10.1997
சாதி வேறுபாடுகளைக் களையும் குடியிருப்புக்காக `சமத்துவபுரம்' உருவாக்க அரசு ஆணை.

15.09.2010
சென்னையில், `அண்ணா நூற்றாண்டு நூலகம்' திறந்துவைத்தார் கலைஞர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900